தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, *1981* ஜனவரி 23

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு''

நல்ல சொல்லால் நல்ல பயனும் தவறான சொல்லால் தீமையும் வரும். எனவே, தம் சொல்லால் தவறு நேராமல் ஒவ்வொருவரும் காத்துக் கொள்வது நல்லது.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது அவர்கள் *22–1–1981* ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1970-ஆம் ஆண்டு வரை, திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அவர்கள் சவூதி அரேபியா போன்ற நாடுகளுக்குப் போய் இஸ்லாமிய மதக் கருத்துக்களையும், சமயக் கருத்துக்களையும், இந்திய நாட்டினுடைய தத்துவங்களையும் வெளி உலகத்திற்குப் பறைசாற்றி வந்த பெரியவர் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் முஸ்லிம் லீக் கட்சியின் துணைச் செயலாளராகப் பணியாற்றியுள்ளார்கள். அவர்கள் அநாதை இல்லங்கள் பலவற்றை நடத்தியவர்கள். அநாதை இல்லங்களுக்குப் புத்தகங்களைச் சேகரித்தார்கள். அநாதை இல்லங்களுக்குத் தொண்டு செய்வதை ஒரு பேறாகக் கருதி வாழ்ந்த பெரியவர் அவர். தமிழகம் பெற்றெடுத்த மிகச்சிறந்த சொற்பொழிவாளர்களிலே அவர் ஒருவர் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுகூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கோள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும்திட்டம்.

*வினா எண் 1—திரு. மு. அப்பாதுரை—மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சிறந்த நாவல், சிறுகதை, கவிதை ஆகியவற்றிற்குத் தமிழ் வளர்ச்சி மன்றம் ஆண்டுதோறும் பரிசு வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கடைசியாக பரிசு வழங்கியது எப்போது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்—(அ) ஆம்.

(ஆ) 1971, 1972 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட நூல்களுக்கு 1975 ஆம் ஆண்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தப் பரிசு வழங்கும் திட்டம் ஏன் பரிசீலிக்கப்படவில்லை என்பது பற்றி அரசு விளக்கம் கூறுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அமுலில் இருக்கிறது. தற்போது அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. வெகு விரைவில் 1973, 1974 ஆகிய ஆண்டுகளில் வெளியான சிறந்த நூல்களுக்குப் பரிசளிப்பு விழா நடைபெறும்.

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியில் வெளி வருகிற நூல்களுக்கு மட்டுமல்லாமல், மற்ற மொழிகளிலே வரக்கூடிய சிறந்த நூல்களை மொழி பெயர்ப்பு செய்து தமிழிலே வெளியாகின்ற நூல்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுமா ?